சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்
MCOP No.4/2021

பெயர். திருமதி. செல்வி நாள் 25.07.2025

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) விபத்து சமயத்தில் நான் கூலி வேலை செய்து வந்தேன். எனக்கு நிரந்தர வருமானம் கிடையாது என்றால் சரிதான். வேன் சக்கரத்தை நான்கு நபர்கள் கழற்றிக் கொண்டிருந்தார்கள். 2 நபர்கள் விளக்கு காண்பித்துக் கொண்டிருந்தார்கள். மேற்கண்ட விவரத்தை ஓட்டுநரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். இவ்வழக்கில் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் வேன் மீது லாரி மோதியிருந்தால் வேனின் உரிமையாளர் நஷ்ட ஈடு கோரியிருப்பார் என்றால் சரியல்ல. வேன் ஓட்டுநர் வேனில் கைத்தடை செலுத்தியிருந்தாரா என்று எனக்குத் தெரியாது. விபத்து நடந்த சாலை இரண்டு வாகனங்கள் செல்லக்கூடிய அகலம் என்றால் சரிதான். ஒரு வண்டி நின்றால் மற்றொரு வண்டி வலப்பக்கம்தான் செல்ல முடியும் என்றால் சரிதான். சாலை கீழிருந்து மேல் நோக்கி செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். வேன் நின்ற இடத்தில் வெளிச்சம் இருந்தது. நான் சுமார் 10 அடி தள்ளி நின்றுகொண்டிருந்தேன். அந்த இடத்தில் வெளிச்சம் இருந்தது. குற்ற இறுதி அறிக்கையைப் பார்த்தால்தான் யார் மீது தவறு என்று தெரியவரும் என்றால் சரியல்ல. நான் தாம்பரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நான் அதிக நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக செலவுத் தொகையை அதிகப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. லாரி ஓட்டுநர் மீது குற்றம் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.